# சூனேமியாள் (பாகம் - 2)



**2 இரா 4 ஆம் அதிகாரத்தில்** கூறப்பட்டுள்ள சூனேமியாள் என்னும் கனம்பொருந்திய ஸ்தீரி, எலிசா தீர்க்கதரிசியை தன் வீட்டில் ஏற்றுக்கொண்டு, அவர் தங்குவதற்கு தேவையான வசதிகளை தன் வீட்டில் செய்து கொடுத்து கனப்படுத்தினாள். இதன் மூலம் எவ்வாறு அவள் ஒரு நற்குணசாலியாய், தேவனுக்கு பயந்து, ஊழியரை கனம் பண்ணி, தன் செல்வத்தையும் மற்ற ஆசிர்வாதங்களையும் எவ்வாறு தேவனுக்காய் செலவு செய்தாள் என்பதையும், எந்த ஊள்நோக்கமும் இல்லாமலும், பிரதிபலனை எதிர்பாராமலும் அவள் வாழ்ந்தாள் என்பதை (சூனேமியாள் - பாகம் 1) என்ற தியானிப்பில் தியானித்தோம்.

எலிசா தீர்க்கதரிசி அவளுக்கு ஏதாவது உதவி செய்ய நினைத்து அதைக் குறித்து அவளிடம் கேட்ட பொழுது கூட அவள் கூறிய பதில் **“அவன் கேயாசியைப் பார்த்து: இதோ, இப்படிப்பட்ட சகல சலக்கரணையோடும் எங்களை விசாரித்து வருகிறாயே, உனக்கு நான் என்ன செய்யவேண்டும்? ராஜாவினிடத்திலாவது சேனாபதியினிடத்திலாவது உனக்காக நான் பேசவேண்டிய காரியம் உண்டோ என்று அவளைக் கேள் என்றான். அதற்கு அவள்: என் ஜனத்தின் நடுவே நான் சுகமாய்க் குடியிருக்கிறேன் என்றாள்.“ (2 இரா 4:13)** என்பதாகும். உண்மையிலேயே

அவளுக்கு பிள்ளையில்லாமல் இருந்தும், அவள் புருஷனும் பெரிய வயதுள்ளவனாய் இருந்தும் **(2 இரா 4:14)**, அவள் அதைப் பற்றி கூட அங்கு கூறவில்லை. இவ்வாறு தன் மிகுந்த மனவேதனையையும் ஒரு குறைவாக கூறாமல் கர்த்தருக்குள் தான் மனநிறைவுள்ளவளாய் சுகமாய் இருப்பதாக கூறின சூனேமியாளின் வாழ்வில் தேவன் கிரியை செய்ய ஆரம்பித்தார், அதனை நாம் தொடர்ந்து தியானிப்போம்.

**2 இரா 4:15,16 கூறுகிறது "அப்பொழுது அவன்: அவளைக் கூப்பிடு என்றான்; அவளைக் கூப்பிட்டபோது, அவள் வந்து வாசற்படியிலே நின்றாள். அப்பொழுது அவன்: ஒரு பிராண உற்பத்திகாலத்திட்டத்திலே ஒரு குமாரனை அணைத்துக்கொண்டிருப்பாய் என்றான். அதற்கு அவள்: ஏது? தேவனுடைய மனுஷனாகிய என் ஆண்டவனே, உமது அடியாளுக்கு அபத்தம் சொல்லவேண்டாம் என்றாள்"**. இங்கு நாம் எலிசா தீர்க்கதரிசி சூனேமியாளுக்கு தேவ வாக்காய், அவளுக்கு தேவன் செய்ய போகிற நன்மையை குறித்து கூறினான். இங்கு உண்மையாய், எவ்வித முறுமுறுபில்லாமல், அவரையே சார்ந்து வாழும் மக்களின் வாழ்க்கையில் எவ்வித குறையிருந்தாலும், அது எத்தனை காலமாய் இருந்தாலும், அவற்றை அவர் குறித்த நேரத்தில் அற்புதமாய் மாற்றிபோடுவார் என்பதை காண்கிறோம். "என் ஆண்டவனே, உமது அடியாளுக்கு அபத்தம் சொல்லவேண்டாம்" என்று அவள் கூறுவது அவிசுவாசத்தினால் இராமல் மனதில் ஏற்பட்ட ஒரு விரக்தியினால் ஏற்பட்ட வெளிப்பாடாகும். நாமும், ஆண்டவரை முழுமையாய் விசுவாசித்து வாழ்கிற போதிலும், சில வேளைகளில் பிரச்சனையின் மிகுதியினால் அல்லது நெடுகாலமாய் மாறாமல் இருக்கிற கஷ்டதினால் சோர்ந்து போகிறோம். அப்பொழுது நாமும் சூனேமியாளை போல சில நேரங்களில் பேசி விடுகிறோம். ஆனால் நம்முடைய கண்ணீரை ஆனந்த களிப்பாய் மாற்றுகிற தேவன் இவற்றையெல்லாம் மன்னித்து நமக்கு அற்புதங்களை செய்கிறார். சூனேமியாளுக்கும் அவ்விதமே செய்தார். **(2 இரா 4:17).**

**2 இரா 4:18-20 வசனங்களில் "அந்தப் பிள்ளை வளர்ந்தான், ஒருநாள் அவன் அறுப்பறுக்கிறவர்களிடத்திலிருந்த தன் தகப்பனண்டைக்குப் போயிருக்கும்போது, தன் தகப்பனைப் பார்த்து: என் தலை நோகிறது, என் தலை நோகிறது என்றான்; அப்பொழுது அவன் வேலைக்காரனிடத்தில், இவனை இவன் தாயினிடத்தில் எடுத்துக்கொண்டுபோய்விடு என்றான். அவனை எடுத்து, அவன் தாயினிடத்தில் கொண்டுபோனபோது, அவன் மத்தியானமட்டும் அவள்**

**மடியில் இருந்து செத்துப்போனான்.**“, இங்கு நாம் காண்கிற காரியங்கள், தேவன் சூனேமியாளுக்கு ஒரு நன்மையை கொடுத்து, அந்த நன்மையின் மூலமாகவே ஒரு சோதனையையும் அனுப்பினார். எப்படி ஆபிரகாமுக்கு தேவன் ஈசாக்கை கொடுத்து, பின்பு பலியிட சொன்னது போல, இங்கு அற்புதமாய் ஆண்டவரால் கொடுக்கப்பட்ட பிள்ளை இறந்து போயிற்று.

**2 இரா 4:21-24 வசனங்களில் “அப்பொழுது அவள் ஏறிப்போய், அவனை தேவனுடைய மனுஷன் கட்டிலின்மேல் வைத்து, அவன் வைக்கப்பட்ட அறையின் கதவைப் பூட்டிக்கொண்டுபோய், தன் புருஷனிடத்தில் ஆள் அனுப்பி: நான் சீக்கிரமாய் தேவனுடைய மனுஷன் இருக்கும் இடமட்டும் போய்வரும்படிக்கு, வேலைக்காரரில் ஒருவனையும் ஒரு கழுதையையும் எனக்கு அனுப்பவேண்டும் என்று சொல்லச்சொன்னாள். அப்பொழுது அவன்: இது அமாவாசியும் அல்ல ஓய்வுநாளும் அல்லவே; நீ இன்றைக்கு அவரிடத்துக்குப் போகவேண்டியது என்ன என்று கேட்கச்சொன்னான். அதற்கு அவள்: எல்லாம் சரிதான், நான் போகவேண்டியிருக்கிறது என்று சொல்லியனுப்பி, கழுதையின்மேல் சேணம்வைத்து ஏறி, தன் வேலைக்காரனை நோக்கி: இதை ஓட்டிக்கொண்டுபோ; நான் உனக்குச் சொன்னால் ஒழிய போகிற வழியில் எங்கும் ஓட்டத்தை நிறுத்தாதே என்று சொல்லிப் புறப்பட்டு,“** இங்கு நாம் காண்கிற காரியங்கள், சூனேமியாளை பற்றிய முழுவடிவத்தையும் நமக்கு காண்பிக்கிறது. குணசாலியான ஸ்தீரியாய், தேவனுக்கு பயந்து ஊழியர்களை கனம்பண்ணி, கணவனுக்கு கீழ்படிந்து வாழும் ஒரு குடும்ப தலைவியாய் நாம் அவளை கண்டோம். ஆனால் இங்கு இப்படிப்பட்ட அசாதரமாண சூழ்நிலையின் மத்தியிலும் பதற்றபடாமல், தன் கணவனுக்கு கூட எதையும் தெரிவிக்காமல், அழுது புலம்பாமல், தனக்கு தேவன் கொடுத்த நன்மை ஒருபோதும் வீண்போவதில்லை, அதன்மூலம் தனக்கு நன்மையே அன்றி தீமை வருவதில்லை என்ற மன உறுதியோடு தேவனிடமே அதைகுறித்து முறையிட எலிசாவிடம் சென்றாள்.

இங்கு ஒரு பெண்ணாய், தாயாய் அவள் மனம் எவ்வளவு துடித்திருக்கும். தன் கணவன் உள்பட யாரிடமும் எதுவும் கூறாமல் தனியே இச்சூழ்நிலையை எதிர்கொள்வது, கர்த்தருக்குள் அவளுடைய மன உறுதியையும், மரித்து போனான் இனி எல்லாம் முடிந்தது என்று எண்ணாமல், இந்த பிரச்சனைக்கு நிச்சயம் தீர்வு உண்டு என்ற மன உறுதியோடு அவள் எலிசாவை நோக்கி செல்வது, ஆபிரகாமின் விசுவாசத்தை காட்டிலும் ஒருபடி மேலோங்கி நிற்கிறது.

மேலும் **2 இரா 4:25,26 வசனங்களில் கூறப்பட்டுள்ளபடி "கர்மேல் பர்வதத்திலிருக்கிற தேவனுடைய மனுஷனிடத்திற்குப் போனாள்; தேவனுடைய மனுஷன் தூரத்திலே அவளை வரக்கண்டு, தன் வேலைக்காரனாகிய கேயாசியைப் பார்த்து: அதோ சூனேமியாள் வருகிறாள். நீ அவளுக்கு எதிர்கொண்டு ஓடி, நீ சுகமாயிருக்கிறாயா? உன் புருஷன் சுகமாயிருக்கிறானா? அந்தப் பிள்ளை சுகமாயிருக்கிறதா என்று அவளிடத்தில் கேள் என்றான். அவள்: சுகந்தான் என்று சொல்லி"**, எலிசாவிற்கு கூட தேவன் தாம் செய்வதை மறைத்து, அவர் மூலமாகவே சூனேமியாளை விசாரிக்க செய்கிறார். 26 ஆம் வசனத்தில் நாம் காண்கிறபடி அந்தப் பிள்ளை சுகமாயிருக்கிறதா என்று கேட்ட கேள்விக்கு, சுகந்தான் என்று அவள் சொல்லிய பதில் அவளுடைய விசுவாசத்தின் உச்சத்தை நமக்கு காண்பிக்கிறது. ஒரு தாயாய், யாரிடம் அந்த கேள்வியை கேட்டாலும் அந்நேரத்தில் உடைந்து போவார்கள், ஆனால் விசுவாசத்தோடு, ஒரு அற்புதம் நிகழ போகிறது என்ற உறுதியோடு சுகந்தான் என்று கூறினாள்.

**2 இரா 4:27** கூறுகிறபடி அவள் எலிசாவின் காலைப் பிடித்துக்கொண்டாள். தேவ மனுஷனாய், தேவனிடத்தில் இருந்து தனக்கு கிடைத்த நன்மைக்கு ஒரு வாய்க்காலாய் இருந்த எலிசா தீர்க்கதரிசியே இப்பொழுது தேவனிடத்தில் இருந்து தனக்கு ஒரு அற்புதத்தையும் பெற்று தர முடியும் என்று நம்பினாள். அவள் ஆத்துமா துக்கமாயிருக்கிறதையும், அதற்கான காரணத்தையும் தேவன் எலிசாவிற்கு வெளிப்படுத்தினார். எலிசா கேயாசியை அனுப்பியும், அவளோ எலிசாவே வரவேண்டும் என்று கூறினாள். **"நான் உம்மை விடுகிறதில்லை" (2 இரா 4:30)** என்று கூறுவது தேவன் நிச்சயமாகவே அற்புதம் செய்வார் அதற்கு எலிசா செயல்படவேண்டும் என்பதை கூறுவதற்கே. இங்கு நாம் அறிந்து கொள்கிற ஒரு சத்தியம், நாம் ஜெபத்திற்க்காய், விடுதலைக்காய் தேவ மனிதர்களை அணுகும்பொழுது, முதலாவது நமக்கு தேவன் அற்புதம் செய்வார் என்ற விசுவாசம் இருக்க வேண்டும், அந்த விசுவாசத்தை தாங்கி பிடித்து, உண்மையான உள்ளத்தோடு தேவ ஊழியர்களும் நமக்காக ஜெபிக்கும் பொழுது நம் வாழ்வில் அற்புதம் நிகழ்கிறது.

நாம் விசுவாசிக்காமல் தேவ ஊழியரை ஒரு மந்திரவாதி போல் நினைத்து, அவரிடம் சென்று ஜெபித்தால் அல்லது காணிக்கை கொடுத்தாள் எல்லாம் மாறிவிடும் என்று நினைப்பது மடமையாகும். **2 இரா 4:37 இல் கூறப்பட்டுள்ளபடி, "அப்பொழுது அவள் உள்ளே போய், அவன் பாதத்திலே விழுந்து, தரைமட்டும் பணிந்து, தன் குமாரனை எடுத்துக்கொண்டு வெளியே போனாள்"**, நன்றியறிதல் உள்ளவளாய், தன் பிள்ளைக்காய் ஜெபிக்க வந்த எலிசாவின் பாதத்தில் விழுந்து தன்

பிள்ளையை சுகத்தோடு எடுத்து சென்றாள். இது நன்மையை பெற்றபின் தேவனுக்கும், தேவ ஊழியர்களுக்கும் நாம் நன்றியறிதல் உள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்பதை வெளிப்படுத்துகிறது. ஏதோ பெற்ற அற்புதத்திற்கு காணிக்கை கொடுத்து விட்டால் எல்லாம் முடிந்தது, இனி மற்றொரு பிரச்சனை வந்தால் அந்நேரம் தேவனையும், தேவ ஊழியரையும் தேடலாம் என்றில்லாமல், என்றும் நன்றியோடு நாம் வாழ வேண்டும் என்பதை வெளிப்படுத்துகிறது. தேவன் தாமே இப்படிப்பட்ட சாட்சியுள்ள வாழ்க்கையை நாமும் வாழ கிருபை செய்வாராக, ஆமென், அல்லேலூயா.